**Spl.SC**.21/2023 அ.சா.9 பிரகாஷ், 22.07.2025

(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர்படுத்தப்பட்டார். 9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆஜர்.)

முதல் விசாரணை தொடர்ச்சி

இருசக்கர வாகனத்தில் சிவப்பு சட்டை அணிந்திருந்த நபர் நான்தான். அந்த இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர்தான் ரஞ்சித்குமார், அவர்தான் வாகனத்தை ஓட்டி வந்தார். உங்கள் முன்னிலையில்தான் ரஞ்சித்குமாரின் தலையில் வெட்டினார்கள் என்றும், அந்த வீடியோ நன்றாக தெரிகிறது என்றால் சரிதான். அதன்பிறகு ரஞ்சித்குமார் இறங்கி ஓடினார் என்று சொன்னால் சரிதான். நீதிமன்றத்தில் உள்ள ஆஜர் எதிரிகளை யார் என்று எனக்கு அடையாளம் தெரியாது. நீங்கள்தான் காவல் துறையினரிடம் வெட்டிய நபர்களை அடையாளம் காண்பித்தீர்கள் என்றால் சரியல்ல. என்னை காவல் துறையினர் விசாரித்தார்கள். என்னிடம் புகைப்படம் காண்பிக்கவில்லை. எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை**

காவல்துறையினர் உங்களை விசாரித்தபோது கடந்த 16.12.2020 ஆம் தேதியன்று மாலை சுமார் 4 மணிக்கு சென்றததாக கூறி அன்று டாஸ்மாக் கடையில் கலையரசனை பார்த்ததாக கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. கலையரசன்

உங்களை பார்த்தவுடன் அங்கிருந்து சென்றுவிட்டார் என்று கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 91 பேக்கரிக்கு சென்றதாகவும், அங்கு ரஞ்சித்குமார் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தை நிறுத்தியபோது நீங்கள் அவருக்கு பின்னால் அமர்ந்தீர்கள் என்றும், அப்போது 3 வண்டியில் 8 நபர்கள் வந்தார்கள் என்றும், பின்னால் வந்த நபர் வாள்கத்தியால் ரஞ்சித்குமாரை வெட்டினார் என்றும், வெட்டு வாங்கிக்கொண்டு ரஞ்சித்குமார் ஓடினார் என்றும், ரஞ்சித்குமார் ஓடியபோது காலால் தடுக்கவைத்து அவர் கீழே விழுந்தவுடன் பின்னால் வந்த இரண்டு நபர்கள் வீச்சு அருவாள், வால்கத்தியால் அவர் தலையிலும், முகத்திலும் வெட்டினார்கள் என்று கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. அப்போது அந்த கத்தியை வாங்கி கலையரசன், பிரசாந்த், பிரசாத், கோகுல்நாத், ஷேக்தாவுத் அவர்களுடன் மற்ற மூன்று நபர்கள் மதுரையை சார்ந்தவர்கள் சேர்ந்து வெட்டிவிட்டு பைபாஸ் சாலையில் சென்றுள்ளீர்கள் என்று கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் அங்கிருந்து சென்று அரசகுமாரிடம் மேற்சொன்ன விபரங்களை கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான், நான் கூறியுள்ளேன். நீங்கள் வெட்டிய நபர்களை காவல் நிலையத்தில் அடையாளம் காண்பித்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. சூர்யா (எ) ஆஜர் எதிரியை நீங்கள் வெட்டிய நபர் என்று காவல் நிலையத்தில் அடையாளம் காண்பித்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் கூல்மணி (எ) மணிகண்டனை, ரஞ்சித்குமாரின் காலை தடுக்கிவிட்டவர் என்று காவல் நிலையத்தில் அடையாளம் காண்பித்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. மேலும், சீனி (எ) சீனிவாசன் மற்றும் சூர்யா (எ) உதயநிதி ஆகியோர்கள்

ரஞ்சித்குமார் வெட்டிய நபர் என்று அடையாளம் காண்பித்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. மேலும், சூர்யா (எ) உதயநிதி என்பவரிடம் இருந்து வால்கத்தியை வாங்கி கலையரசன், ரஞ்சித்குமாரின் தலையில் வெட்டியுள்ளார் என்று கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் 23.12.2020 ஆம் தேதி மேற்சொன்ன விபரங்களை காவல்துறை விசாரணையில் கூறியுள்ளீர்கள் என்றும், தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

<u>7 மற்றும் 9 ஆம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

ரஞ்சித்குமார் திருச்சியை சேர்ந்தவர் என்றால் சரிதான். ரஞ்சித்குமார் அவரது மனைவியுடன் கரைப்பாளையத்தில் குடியேறினார் என்று சொன்னால் சரியல்ல. ரஞ்சித்குமார் சம்பவத்திற்கு 15 நாட்கள் முன்பு திருச்சி கிளை சிறையில் இருந்தார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. ரஞ்சித்குமார் திருச்சியில் கொள்ளையடித்த வழக்குகளில் தொடர்பு இருந்து, கொள்ளையடித்த பணத்தில் திருப்பி கொடுப்பதில் தகராறு ஏற்பட்டதால்தான் அவர் திருச்சியில் இருந்து கரூருக்கு குடிபெயர்ந்தார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. வான்மதியிடம் ரஞ்சித்குமாருக்கு தகாத உறவு இருந்ததால் வான்மதியின் கணவரை ரஞ்சித்குமார் அடித்து விரட்டிவிட்டார் என்றும், அதனால் ரஞ்சித்குமாருக்கும், வான்மதியின் கணவருக்கும் பிரச்சனை இருந்து வந்தது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த அன்று ரஞ்சித்குமார் எந்த வீட்டில் இருந்து வந்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் என் முதலாளிதான் அழைத்து வந்தார். சேலம் -

கரூர் செல்லும் பை பாஸ் சாலையில்தான் ஒயின்ஷாப்பும், பாரும் உள்ளது என்று சொன்னால் சரிதான். பாரில் CCTV உள்ளது என்று சொன்னால் இருக்கும். நீங்கள் ரஞ்சித்குமாருடன் செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.